**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08082024-7293

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 04.01.2024

Accepted: 13.03.2024

Published: 01.04.2024

Citation:
Mosasrupan, C. N. (2024). The Relations between Sri Lanka and Southeast Asia in Ancient and Medieval History Period (Historical Review). *Shanlax International Journal of Tamil Research*, 8(4), 39–47.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7293

*Corresponding Author:
nirojinic@esn.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Relations between Sri Lanka and Southeast Asia in Ancient and Medieval History Period (Historical Review)

**Chrisdina Nirojini Mosasrupan**
*Lecturer, Department of History*
*Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka*

**Abstract**
*Sri Lanka had political, economic, socio-cultural ties with Southeast Asia since the earliest times.Vijayabahu I, Parakramabahu I and Parakramabahu II are associated with a major impact of culture in Southeast Asian countries such as Thailand, Cambodia, Sri Vijayam and Burma. The relations between these countries are examined through reliable evidence. The research question is 'What connections between Sri Lanka and South East Asia at ancient and medieval historic periods?'. Archaeological evidences, and foreign references are important in revealing the history of a society. Based on this, the main purpose of this study is to explore the historical relations between Southeast Asia and Sri Lanka in ancient and medieval history. Historical research methods are going to be utilized to compile data based on evidence. Primary data for this study are inscriptions, Mahavamsa, The Chulavamsa, The Rajavalya etc. Secondary data are books related to relations of both regions, articles published in journals and information from the web. However, the lack of reliable historical evidence in both areas is a challenge during this study.*
***Keywords:*** *Sri Lanka, South East Asia, Culture, Ancient, Medieval, History*

**References**
1. Bijay Kumar Swain (2008). The Kalinga Heritage, Authors sprees.
2. De Silva., KM (2004). A History of Sri Lanka, Gurgaon: Penguin Random House India Pvt.Ltd.
3. Gunasekara.B (1995). Rajavaliya, Asian Educational Services, New Delhi, Madars
4. Sirisena. W.M., (1978). Sri Lanka and South East Asia, E.J.Brill, Netherland.
5. Wilhelm Geiger (ed), (1950). Mahavamsa, The Ceylon Goverment Information Department, Colombo.
6. Wilhelm Geiger (ed), (1998). Culavamsa, Asian Educational Services, New Delhi, Madars.
7. https://www.sundaytimes.lk/100620/Plus/plus_16.html
8. https://www.researchgate.net/publication/371761575_ilankai_varalarriyalil_ka-linkam_Kalinga_in_Sri_Lankan_Historiography

# பண்டைக்கால இடைக்கால வரலாற்றில் இலங்கைக்கும் தென்கிழக்காசியாவுக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்புகள்

***கிறிஸ்தினா நிரோஜினி மோசஸ்ரூபன்***
விரிவுரையாளர், வரலாற்றுத் துறை
கலை மற்றும் கலாச்சார பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*ஆரம்ப காலம் முதல் தென்கிழக்காசியாவுடன் இலங்கை அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டுத் தொடர்புகளைப் மேற்கொண்டுள்ளது. தென்கிழக்காசிய நாடுகளான தாய்லாந்து, கம்போடியா, ஸ்ரீவிஜயம், பர்மா போன்ற நாடுகளுடன் முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு, இரண்டாம் பராக்கிரமபாகு போன்றோர் தொடர்புற்றுள்ளனர். பண்டைக்கால, இடைக்கால வரலாற்றில் இலங்கைக்கும் தென்கிழக்காசியாவுக்குமிடையில் எத்தகைய தொடர்புகள் வரலாற்றுச் சான்றுகளினூடாக வெளிப்பட்டன? என்ற ஆய்வு வினாவைப் பயன்படுத்தி இவ்ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு சமூகத்தின் வரலாற்றை வெளிப்படுத்துவதில் தொல்லியல், இலக்கியச் சான்றுகள், வெளிநாட்டார் குறிப்புக்கள் முக்கியமானது. இதனடிப்படையில் தென்கிழக்காசியாவுக்கும் இலங்கைக்குமிடையில் காணப்படும் வரலாற்று உறவுகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வு முறையானது வரலாற்றடிப்படையில் பகுப்பாய்வாக அமைந்துள்ளது. தொல்லியற் சான்றுகள், மகாவம்சம், சூளவம்சம், இராஜாவலிய போன்றவற்றை முதல்நிலைத் தரவுகளாகக்கொண்டும் ஏனைய நூல்கள், கட்டுரைகள், இணையத்தளத் தகவல்களை இரண்டாம் நிலைத் தரவுகளாகக்கொண்டும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.*
***திறவுச் சொற்கள்:*** *இலங்கை, தென்கிழக்காசியா, பண்பாடு. ஆதிகாலம், இடைக்காலம், வரலாறு*

## அறிமுகம்

பண்டைக்கால இடைகால இலங்கை வரலாற்றை இந்தியா மட்டுமே பாதித்ததென முடிவுக்கு வருதல் தவறானதாகும். இலங்கை அமைவிடம் காரணமாகத் தென்கிழக்காசிய நாடுகளுடனும் சீனாவுடனும் சமய, வணிக பண்பாட்டு உறவுகளை மிகுதியாகவும் அரசியற் தொடர்புகளை இடையிடையேயும் கொண்டிருந்தது. அத்தொடர்புகள் சமய பொருளாதார, திருமண, பண்பாட்டு அடிப்டையிலும், அரசியல் நடவடிக்கை சார்ந்ததாகவும், ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவும் அமைந்துள்ளன. பண்டைக்கால, இடைக்கால வரலாற்றில் இராசரட்டை இராசதானி, இடம்பெயர் இராசதானிகள் உள்ளடங்குகின்றன.

இரு பகுதிகளுக்கிடையில் தொடர்புகள் ஏற்படுத்தப்பட புவியியல் அமைவிடம் முக்கிய காரணமாகும். மேற்குத்தேய நாடுகளிலிருந்து தென்கிழக்காசியா செல்லும் கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களில் நங்கூரமிட்டுக் கொண்டன. சீனாவிலிருந்து பாகியன் பயணித்த கடற்பாதையைப் 'பீல் உதாரணமாகக் குறிப்பிட்டுள்ளார். மேற்கிலிருந்து வந்த வணிகர்கள் மகாதித்த வந்தனர். அங்கிருந்து கோர மண்டலக் கடற்கரை வழியாக வங்காள விரிகுடாவுக்கும் மலாக்கா வழியாகவும் பயணித்து சுமத்திரா, ஜாவா, மெலுக்கஸ் ஊடாக இறுதியாக மலாக்கா வரை சென்றனர் (Dewaraja 2000:477). இதனால் இரு பகுதிகளுக்கிடையில் பண்பாட்டுப் பரவல் ஏற்பட்டது.

## கம்போடியா - இலங்கை

பண்டையக் காலத்தில் "காம்போஜம்" என அழைக்கப்பட்ட தென்கிழக்காசிய

நாடான கம்போடியாவுடன் தொடர்புகள் இருந்தமைக்கு சான்றுகள் கிடைக்கின்றன. முதலாம் மகாபராக்கிரமபாகுவின் பர்மிய படையெடுப்பிற்கான காரணங்களை விபரிக்கும் போது சூளவம்சத்தில் "காம்போஜ நாட்டுக்கு லங்காவின் மன்னனால் அனுப்பப்பட்ட இளவரசியைப் பர்மா நாட்டு மன்னன் பலவந்தமாகக் கைப்பற்றிக்கொண்டான்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (சூளவம்சம் அத்தியாயம் -76, செய்யுள் - 35). இதனடிப்படையில் பார்க்கும் போது இலங்கையிலிருந்து இளவரசியைக் கம்போடியாவுக்கு அனுப்புமளவுக்கு இலங்கைக்கும் கம்போடியாவுக்கும் இடையில் நல்லுறவு இருந்துள்ளமை புலனாகின்றது.

பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் இலங்கை வந்து சங்கத்திற் சேர்ந்து பர்மாவுக்குத் திரும்பிய "சப்பட" என்ற சத்தர்ம ஜோதிபால தேரருடன் இலங்கையிலிருந்து கூடச் சென்ற சமயத்தோழர்களுள் ஒருவர் கம்போடியாவில் இளவரசராக இருந்தார் என்ற செய்தி காணப்படுகின்றது. பர்மாவில் சிங்கள சங்கம் (சீஹுள-சங்க) நிறுவப்பட்டது. இலங்கையிலிருந்து பர்மாவிற்கு சென்ற தேரவாதப் பௌத்தம் கம்போடியாவுக்கும், சீயத்துக்கும் பரவிக்கொண்டமை பற்றிச் சீனக்குறிப்புக்கள் எடுத்துக்காட்டு கின்றன.

ஏழாம் ஜெயவர்மன் தனது மகன் தமலிந்தாவை இலங்கைப் பௌத்த துறவிகளிடம் பாலி வேதங்களைப் படிக்க அனுப்பியிருந்தார். மீண்டும் அவர் கம்போடியாவுக்குத் திரும்பியபோது தான் பெற்ற தேரவாதப் பயிற்சியின்படி பௌத்த மரபுகளை ஊக்குவித்தார்.

பொலன்னறுவைக் காலத்தில் சிறப்புற்று விளங்கிய தென்கிழக்காசியத் தொடர்புகள் அதன் பின்னரான காலப்பகுதியில் சமயப் பண்பாட்டுத் தொடர்புகளாக மாற்றம் பெற்றன. கம்போடியாவுடனான சமயத் தொடர்புகள் பதினான்காம் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வலுப்பெற்றன. கோட்டையில் ஆட்சி செய்த ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் பர்மா, சீயம், கம்போடியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிக்குகள் இலங்கை வந்து (1425 அளவில்) திருநூல்களைக் கற்றுத் தேர்ந்து களனியில் புதிதாகக் குரு அபிடேகம் பெற்றுத் தத்தம் நாடுகளுக்கு மீண்டனர். அங்கு இலங்கையில் உள்ளது போன்ற சங்கங்களை நிறுவியதாகவும் கூறப்பட்டுள்ளது. தேரவாதப் பௌத்த நூல்கள் பாலியிலுள்ளதால், அம்மொழியே இரு நாடுகளுக்கிடையேயும் கலாசாரப் பரிவர்த்தனை செய்ய உதவியிருக்கும். யாப்பகுவாவிலுள்ள அரண்மனையின் வாயிற்படிக்கட்டின் அமைப்புக் கம்போடியாவிலுள்ள அக்காலக் கெமர் கட்டிடங்களுக்குள்ளதைப் போன்று அமைந்திருப்பதை அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

## ஸ்ரீவிஜயம் - இலங்கை

ஸ்ரீ விஜயப் பேரரசுக்கும் இலங்கைக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்தமை பற்றிச் சூளவம்சத்திலும் பிற காலவேடுகளிலும் பெரிதளவில் குறிப்புகள் இல்லை. ஆனாலும் "காலிங்கத்துடன்" (கலிங்கம்) இலங்கை வைத்திருந்த தொடர்புகளைச் சூளவம்சத்தின் 54ஆம் அத்தியாயம் குறிப்பிடுகின்றது. செனரத் பரணவிதானப் பத்தாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலான நெருங்கிய உறவுகள், இந்தியாவிலுள்ள கலிங்கத்தால் ஏற்படவில்லை. மாறாக மலேசியாவில் இருந்த கலித்துடனேயே இலங்கைக்குத் தொடர்புகள் இருந்ததாகக் கூறுகிறார். பத்து மற்றும் பதினோராம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கும் ஸ்ரீ விஜயாவுக்கும் இடையிலான உறவுகள் குறித்த ஆய்வை மேற்கொண்டபோது, இந்தக் கருத்தை ஆதரிக்கும் சில ஆவணங்களைக் கண்டுபிடித்ததாகவும் குறிப்பிடுகின்றார். இவரது Ceylon and Malaysia (1966) எனும் நூலில் சில இலங்கைக் கல்வெட்டுக்களை ஆதாரங்காட்டி இலங்கைக்கும் ஸ்ரீ விஜய

அரசுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்ததை நிறுவ முயன்றுள்ளார். அத்தோடு சமகாலச் சிங்கள இலக்கியகர்த்தாக்கள் "கலிங்க" எனும் சொற்றொடரைக் கிழக்கிந்தியாவைக் குறிக்கப் பயன்படுத்தாமல் மலேசியாவில் உள்ள ஒரு பகுதியினைக் குறிப்பதற்குப் பயன்படுத்தியமைக்குச் சான்றுகள் உள்ளன என்பது பரணவிதானவின் வாதமாகும் (https://www.researchgate.net/publication/371761575_ilankai_varalarriyalil_kalinkam_Kalinga_in_Sri_Lankan_Historiography). எவ்வாறாயினும், இக்கருத்துப் பரவலான விமர்சனங்களுக்கு உட்பட்டது (Bijay Kumar Swain *2008: 311*). "கல்வெட்டுக்களில் வரும் கூற்றுக்களுக்குக் பரணவிதான கொடுக்கும் விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக இல்லை" என்பது கிருஷ்ணராசாவின் கருத்தாகும் (கிருஷ்ணராசா *2012:441*). சிறிசேன (W.M.Sirisena) என்பவர் எழுதிய இலங்கையின் கலிங்க வம்சமும் தென்கிழக்காசியக் கோட்பாடும் (The Kalinga Dynasty of Ceylon and the Theory of its South East Asian Origin) எனும் கட்டுரையில் பரணவிதானவின் கருத்தை நிராகரித்துள்ளார் (W.M.Sirisena *1978:5*). ஆயினும் நான்காம் சேனன் காலத்தில் குணார்ணவ மன்னன் படையுதவி வேண்டியதாகவும் பின்பு சுந்தரியைத் திருமணம் செய்து கொடுத்த வரலாறு தொடர்பான செய்திகள் ஸ்ரீவிஜய வரலாற்றில் கிடைக்கின்றன. ஆயினும் இலங்கைக் குறிப்புக்களில் ஆதாரமில்லை.

### பர்மா - இலங்கை

முதலாம் விஜயபாகு ஆட்சியைப் பெறுமுன் இருந்த அரசியல் நிலைமைகள், நாட்டின் முன்னேற்றத்தைப் பல வழிகளிலும் தடைசெய்திருந்தன. இதனால் சீரழிந்துபோன கலாச்சார, சமூக பொருளாதாரத் துறைகளை மேம்படுத்துவதில் அவர் கவனம் செலுத்தினார். உபசம்பதாச் சடங்கிற்குத் தேவையான பௌத்தத் துறவிகள் இல்லாததால் ராமஞ்ஞ தேசத்திலிருந்து துறவிகளை அழைத்து உபசம்பதா நிகழ்வை நடத்தினான் (சூளவம்சம் அத்தியாயம் - *60*, செய்யுள் *3-8*).

இச்செய்தி ராஜவலியவிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. "மன்னர் விஜயபாகு எண்பத்தாறு ஆண்டுகளாக இலங்கைத் தீவை ஆக்கிரமித்திருந்த தளபதி லோகேஸ்வரன் உள்ளிட்ட தமிழர்களைக் கொன்று துரத்தி மூன்றுராஜ்யங்களையும்ஒருங்கிணைத்தார். முதலாவதாகத் தமிழர்கள் துறவிகளை அழித்தமையாலும் மஞ்சள் வஸ்திரம் அணிந்த நன்னடத்தையுடைய ஒரு துறவியையும் காணாதமையால் அரசன் பல இலட்சம் மதிப்புள்ள விலைமதிப்பற்ற கற்கள், முத்துக்கள் மற்றும் ரத்தினங்களை ராமஞ்ஞ (பர்மா) தேச அரண்மனைக்கு அனுப்பினார். அங்கிருந்து இருபது நல்ல நடத்தைகொண்ட துறவிகளைச் சமயப் பிரச்சாரம் செய்வதற்காக வரவழைத்தார். ஆயிரம் பிக்குகளுக்கு உயர் பட்டாபிசேகம் நடாத்தப்பட்டது. பழைய தலைநகரான அனுராதபுரத்தில் இருந்த முக்கிய விகாரைகள், சஞ்சாரமற்றுப் பாழெய்தியிருந்தன. தூபங்கள், பிரிவெனாக்கள் முதலான சமயக் கட்டிடங்கள் சேதமுற்றிருந்தன. பௌத்தக் குருமார்கள் உருகுணைக்கும், வெளிநாடுகளுக்கும் சென்று வாழலாயினர். இங்கு இருந்தவர்களும் உபசம்பதா என்ற குரு அபிசேகத்தை நடத்துவதற்குரிய தகுதியுடையவர்களாக இருக்கவில்லை. ஊழல்களே மிகுதியாகக் காணப்பட்டன. குருமாரிடையே எல்லா வகைகளிலும், பண்டையப் பெருமையையும் பொலிவையும் இழந்து காணப்பட்ட பௌத்த சமயத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற உறுதியுடன் விஜயபாகு செயலாற்றினான். புதிய குருமார்களைச் சங்கத்திற் சேர்க்கும் உபசம்பதா வைபவத்தை மீண்டும் நடாத்தியமை இவனுடைய முதற் பணியாகும். பர்மிய அரசனான அனோரத்தனுடன் விஜயபாகு கொண்டிருந்த நல்லுறவைப் பயன்படுத்தி,

இச்சடங்கை நடத்தும் தகுதிவாய்ந்த குருமாரை அந்நாட்டிலிருந்து அழைப்பித்து அனுராதபுரத்தில் பல விகாரைகள் புனரமைக்கப்பட்டன (Gunasekara 1995:58).

பர்மாவின் ஆட்சியாளனாக அனோரத்தன் (1044-1077) விளங்கியபோது இலங்கை வேந்தன் முதலாம் விஜயபாகுவுக்கும், பர்மிய அரசனுக்குமிடையே தூதுக் குழுக்களும் வெகுமதிகளும் பரிமாறப்பட்டு, நல்லுறவுகள் நிலைநாட்டப்பட்டிருந்தன. இரு நாடுகளும் தேரவாதப் பௌத்தத்தைக் கைக்கொண்டதால் சமயத்தொடர்புகளும் இருந்துள்ளன. சூளவம்ச விவரப்படி, இரு நாடுகளுக்குமிடையே வணிகமும் நடைபெற்றுள்ளது. இலங்கையிலிருந்து வெகுமதிகளுடன் செல்லும் கப்பல் ஒவ்வொன்றுக்கும் தனது பரிசாக பர்மிய மன்னன் யானைகளை வழங்கி வருவது வழக்கமாயிருந்த செய்தியை அறியமுடிகின்றது.

பொலநறுவை மன்னன் முதலாம் விஜயபாகுவின் காலத்தில் பர்மாவுடன் இலங்கைக்குச் சுமுகமான உறவுகள் நிலவியிருந்தாலும் அவனுக்குப் பின்பு மன்னரான முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் பகைமை வளர்ந்து போரில் ஈடுபட்டதைக் காணலாம். அருமண (பர்மா) தேசத்தின் மீது முதலாம் பராக்கிரமபாகு படையெடுத்தப் போது அருமண தேசத்து மன்னன் அலவுங்கசித் கொல்லப்பட்டான் என்ற செய்தியைச் சூளவம்சக் குறிப்புக்கள் காட்டுகின்றன. இலங்கைப்படை நாட்டுக்குள் புகுந்ததைப் பற்றி பர்மிய ஆதாரங்கள் குறிப்பிடவில்லை. (கோல். D.G., 1971:176).

1112இல் ஆட்சிக்கு வந்த அலோங்சிது என்ற பர்மிய மன்னன், பல தொல்லைகளைச் சமாளிக்கவேண்டி நேர்ந்தது. இயல்பாகவே மூர்க்கசுபாவமுடையவனாக இருந்ததால் யானை பரிமாறும் வழக்கத்தை நிறுத்தினான். பிறநாடுகளுக்கு (இலங்கையுட்பட) யானைகளை வரையறையின்றி விற்பதை அவன் தடுத்து அவற்றின் விலையை இரண்டு அல்லது மூன்று மடங்காகக் கூட்டினான்.

இலங்கை வியாபாரிகளை அவமதித்து கப்பல்களையும் அவர்களிடமுள்ள யானைகளையும், பணத்தையும், அபகரித்து, அங்குள்ள மலைநாட்டிலுள்ள அரணில் சிறைவைத்துத் துன்புறுத்தினான். பின்னர் சிங்களத்தூதுவரை தனது அவைக்கு அனுப்புமாறு கட்டளை பிறப்பித்தான். இலங்கையிலிருந்து இனிமேல் கப்பல்கள் வர அனுமதிக்கப்படமாட்டாதெனவும், தனது ஆணையை மீறிக் கப்பல்களில் வருபவர்களைக் கொல்ல நேர்ந்தால் அதற்குத் தான் பொறுப்பில்லை என்று உறுதி தரும்படி பலவந்தப்படுத்தினான். இதன்பின், பழுதடைந்த கலமொன்றில் சிங்களத் தூதுவர்கள் இருவரை விடுவித்து ஆழ்கடலில் செல்லவிட்டான். வேறொரு சந்தர்ப்பத்தில், இலங்கையிலிருந்து சென்ற தூதுவர்களிடம் அவர்கள் கொண்டு சென்ற வெகுமதிகளையும், பொருட்களையும் பெற்றுக்கொண்டு யானைகளைத் தருவதாகக் கூறி ஏமாற்றினான். இலங்கை மன்னனால் அனுப்பப்பட்டு கம்போடியாவுக்குச் சென்று கொண்டிருந்த சிங்கள இளவரசியையும் அலோங்சிது சிறைபிடிக்கச் செய்தான். அலோங்சிது இலங்கை அரசனுக்குப் பெருங்கோபத்தை உண்டாக்கத்தக்க செயல்களைப் புரிந்ததாகச் சூளவம்சம் கூறுகின்றது. இவற்றைத் தனது ஆட்கள் சொல்லக்கேட்ட பராக்கிரமபாகு பர்மா மீது ஒரு படையெடுப்பை மேற்கொள்ள முடிவுசெய்து, அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தான்.

படையெடுப்புக்கு வேண்டிய கப்பல்கள், படைவீரர்கள், போர்க்கருவிகள், உணவு, மருந்து வகைகள் போன்ற யாவும் ஆயத்தமானதும், படைக்கலங்கள் இலங்கையின் வடகிழக்குக் கரையிலுள்ள துறையிலிருந்து (பல்லவவங்க Pallavavanka அல்லது பல்வக்கி) புறப்பட்டன. தமிழ் அதிகாரி ஆதித்தன் (தமிழாதிகாரின்

ஆதிச்ச Damiladhikarin Adicca) தலைமையில் இப்படை சென்றது. இப்படையெடுப்பிற் சேர்ந்த கலங்களில், நகரகிரி கீர்த்தி என்பவனது தலைமையிலிருந்த ஐந்து கப்பல்கள் தெற்குப் பர்மாவிலுள்ள குஸிமதீர்த்தம் என இலக்கியங்களில் அழைக்கப்பட்ட குசுமிய (தற்போதைய பெசீன்) என்ற துறையை அடைந்தன. இலங்கைப் படை வீரர்கள் விரைவில் அத்துறைமுகத்தின் சுற்றுப் புறங்களைத் தாக்கி அழிவுகளைச் செய்து, அவர்களை எதிர்த்த பர்மியப் படை களை புறங்கண்டனர். தமிழ் அதிகாரி ஆதித்தனது தலைமையிற் சென்ற வேறு சில கப்பல்கள் பப்பாலம் என்ற துறையை அடைந்ததும், அவற்றில் சென்ற வீரர்கள் அப்பகுதியில் சமர்களை நிகழ்த்திப் பின் திடீரென உக்கம என்ற நகர்வரை முன்னேறி, அங்கு நடைபெற்ற கடுஞ்சமரில் பர்மிய மன்னனைக் கொன்றதாகவும் கூறப்பட்டுள்ளது. இவ்வெற்றிகளின் பின் சிங்களப்படைகள் இலங்கை மீண்டன. பர்மாவிலிருந்து இலங்கை வந்த தூதுவர்கள் சங்கத்தினரைத் தலையிடச்செய்து, பராக்கிரமபாகுவுடன் உடன்படிக்கை செய்து மீண்டனர். சிங்கள வர்த்தகர்களும் முன்னர் அனுபவித்த சலுகைகளையும், உரிமைகளையும் மீண்டும் பெறுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையே அமைதியேற்பட்டபின், வணிக உறவுகள் மட்டுமன்றி, சமய பண்பாட்டுத் தொடர்புகளும் மீண்டும் நடைபெற்று வரலாயின (சூளவம்சம் அத்தியாயம் - 76, செய்யுள் 10, கிருஷ்ணராசா 2012: 428,429).

தெவனகலக் கல்வெட்டில் இப்படையெடுப்பில் தலைமை தாங்கிய கீர்த்தி என்பவருக்குப் பரிசாக வழங்கப்பட்ட நிலத்தானங்கள் (நீகரகிரி கிர்த்தில்) பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவனது பட்டப்பெயரான “புவனாதித்த” என்ற பெயர் இப்பொறிப்பில் குறிக்கப்பட்டுள்ளது. குசுமியத்துறை தாக்கப்பட்டதையும், பர்மிய தூதுவர்கள் உடன்படிக்கை செய்ய இலங்கை வந்ததையும் இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது (கிருஷ்ணராசா 2012: 430). பாகனைப் பற்றி ஆராய்ச்சி செய்துள்ள கலாநிதி தான்ருன் (Than Tun) “History of Burma down to the end of the Thirteenth century” என்ற நூலில் இப்படையெடுப்பின்போது பர்மிய அரசன் கொல்லப்பட்டான் என்ற சூளவம்சக் கூற்றை ஏற்றுக்கொண்டுள்ளார் (Than Tun 1958: 83,84).

இலங்கைப் படையெடுப்பு பராக்கிரமபாகுவின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் (1165 இல்) மேற்கொள்ளப்பட்டமையால், 1165இல் அலோங்சிது இறந்தான் எனக் கொள்வது பொருத்தமாகக் காணப்படுகின்றது. ஆனால் பர்மாவில் இது பற்றிய தடயங்கள், தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. இந்தப் படையெடுப்பில் மன்னர் முதலாம் பராக்கிரமபாகுவின் படைகள் பர்மியப் படைகளை அழிப்பதில் வெற்றி பெற்றதாகவும், இங்கு ராமன்யப் பகுதியில் வாழ்ந்த துறவிகள் இரு தரப்பினரையும் சமரசப்படுத்தியதாகவும் சூளவம்சம் குறிப்பிடுகிறது (சூளவம்சம் அத்தியாயம் 76, சரணங்கள் 10-33). வர்த்தகப் பிணக்குக் காரணமாக ஏற்பட்ட பிரச்சினையைச் சூளவம்சம் மிகைப்படுத்திக் குறிப்பிட்டுள்ளது என்ற கருத்தை உணரமுடிகின்றது.

மகாபராக்கிரமபாகுவுக்கு பின் ஆட்சிக்கு வந்த இரண்டாம் விஜயபாகுவும் பர்மிய அரசனுடன் நட்புறவு பாராட்டி ஓர் ஒப்பந்தத்தைப் பாலியில் எழுதி அதனை பர்மிய அரசனுக்கு அனுப்பியதாகச் சூளவம்சம் குறிப்பிடுகின்றது (அத்தியாயம் 80). மானாவுலு சந்தேசய நூலில் அரிமத்தனபுரத்திலுள்ள சங்கத்தினருக்கு இலங்கையிலிருந்து தூது அனுப்பியதாக குறிப்பிடுகின்றது (கிருஷ்ணராசா 2012: 445). நிஸங்க மல்லனும் அரமண நாட்டுடனும் (பர்மா), காம்போஜத்துடனும் நட்புறவு வைத்திருந்ததாக அவனது காலக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

அனவரதன் ஆட்சிக் காலத்தில் தாட்டனிலிருந்து கொண்டு வரப்பட்ட காஞ்சிபுர முறைக்குப் பதிலாக தேரவாத சிங்கள முறையைப் பின்பற்றும் சமய இயக்கம் பர்மாவில் ஆரம்பமாகியது (கோல்னு.பு., 1971:176). பர்மிய நாட்டு ஆதாரங்களின்படி அந்நாட்டு மன்னன் அலவுங்கசித்தின் மரணத்திற்குக் காரணமாயிருந்த அவனது மகன் நரபசித்து என்பவன் அரசினைப் பெற்றவகையினையும் அதனால் ஏற்பட்ட கலவர நிலையினைக் கண்ட சமயத் தலைவர் பந்தகு 1167 காலப் பகுதியில் இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படுகின்றது. அதன்பின்னர் சில ஆண்டுகளுக்கு பின் “உத்தர ஜீவ” என்ற மொன் பிக்கு 1180 இலங்கைக்கு வந்தார். பர்மா சென்றதும் இலங்கையை சென்றடைந்த “முதல் யாத்திரிகர்” என்ற பட்டம் பெற்றார்.

சபதா என்ற மொன் பிக்கு ஒருவர் இலங்கையில் பத்து ஆண்டுகள் தங்கியிருந்தார். இலங்கையிலிருந்த சங்கத்தார் நன்கு வரவேற்று உபசரித்தனர். சபதா என்பவர் சில ஆண்டுகள் இலங்கையில் திருநூல்களைப் பயில்வதில் செலவிட்டுப் பிக்குவாக குருஅபிசேகத்தை இலங்கையிலேயே பெற்றார். மேலும் பத்தாண்டுகள் அவர் இலங்கையில் தங்கியிருந்த பின்னர் சபத தேரரும் வேறு நான்கு பிக்குகளும் பர்மாவுக்குத் திரும்பினர் (1190). அவர்களுள் ஒருவரான தமலிந்தா ஏழாம் ஜெயவர்மனின் மகன் என்பது சீதேயின் கருத்தாகும் (கோல்னு.பு., 1971:176). இவர் இலங்கை சென்றுவந்த “இரண்டாவது யாத்திரிகர்” என்ற பட்டம் பெற்றார். அவர்கள் பர்மாவில் சிஹள - சங்க என்ற ஒரு புதிய சங்கப்பிரிவினை நிறுவினார். பர்மாவின் சமய வரலாற்றில் இப்பிரிவு முக்கியப் பங்கு வகித்தது. தாட்டன் என்ற முந்தைய பிரிவினைக் காட்டிலும் சீஹள - சங்கப் பிரிவுக்கு பர்மிய மன்னர்கள் கூடுதலான ஆதரவு வழங்கினர். பர்மிய மன்னன் கியஸ்வா (1249) காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த பௌத்த சமயக் குழுக் கற்றலை மேற்கொண்டு, மீண்டும் பர்மாவுக்குச் சென்று சமயத்தை தூய்மைப்படுத்தும் பணியை மேற்கொண்டது (கோல்.னு.பு., 1971:178). இலங்கையிலிருந்து சென்ற தேரவாத பிரிவு, பர்மாவில் நிலை கொண்டு பின்னர் பர்மாவிலிருந்து தாய் மக்களிடையேயும், லாவோஸ் இராச்சியங்களிலும், கம்போடியாவிலும் பரவியது.

இலங்கைக்கும் பர்மாவுடனான தொடர்புகள், பௌத்தப் பண்பாட்டுத் தொடர்புகளாகவும் தாய்லாந்துடன் தொடர்புபட்டதாகவும் அமைந்துள்ளன. 1331ஆம் ஆண்டில் ‘உதும் - பர - மகாசாமி’ என சீய ஆதாரங்களில் குறிப்பிடப்பட்ட உடும்பரகிரியைச் (தற்போதைய திம்புலாகல) சேர்ந்த இலங்கைப்பிக்கு பர்மாவில் இலங்கையில் பின்பற்றப்பட்ட சங்க ஒழுக்கவிதிகளைப் புகுத்துவதற்குக் காரணமாகவிருந்தார். “சங்கராஜ மேதங்கர மகாதேரர்” என்பவரும் இவர்தான் எனவும் கூறப்படுகின்றது. மேலும், “தர்மசேதி” (1472-92) என்ற பெகு மன்னன் இலங்கையிலுள்ள முறைப்படி தனது நாட்டு பௌத்த பிக்குகளைக் குரு அபிசேகம் பெறச் செய்வதற்காக இலங்கைக்கு சிஹள சங்க மடங்களில் கல்வி கற்ற 22 மூத்தத் துறவிகளைத் தேர்ந்தெடுத்துக் கப்பல்களில் அனுப்பிவைத்ததாகவும் அவர்கள் இலங்கையில் நன்கு வரவேற்கப்பட்டதோடு மகாதேர விடகாமாவின் தலைமையில் களனி நதியில் தங்கள் குரு அபிசேகத்தினைப் பெற்றனர். பின்னர் இலங்கையிலிருந்து பர்மா மீண்ட குருமார்கள் பெகுவுக்கு அண்மையில் கல்யாணி சீமா என அழைக்கப்பட்ட எல்லையுள் இலங்கைமுறைப்படி உபசம்பதாவினை நடாத்தினார். வரலாற்று காலப் பகுதியில் பர்மாவுக்கும் இலங்கைக்குமிடையே மிக நெருங்கிய சமயத் தொடர்புகள் இருந்துள்ளமையை அறியமுடிகிறது.

**தாய்லாந்து - இலங்கை**

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் அசோகரால் பரப்பப்பட்ட அவாடாப் பள்ளிதான் தாய்லாந்துக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பௌத்த சமயத்தின் முதல் வடிவமென்பதை இலங்கையின் பாலி மொழி இலக்கியமான மகாவம்சம் உறுதிப்படுத்துகின்றது. இதனைத் தவிர தாய்லாந்துடனான உறவுநிலை தொடர்பான அதிகளவு தகவல்கள் தம்பதேனியா காலத்தில் கிடைக்கின்றன. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரான தாய்லாந்து வரலாற்றை அறிய சான்றுகள் அரிதானவை. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுகோத்தாயில் முதல் சுதந்திர தாய் இராச்சியம் நிறுவப்பட்டது. பதினான்காம் நூற்றாண்டிலிருந்து அதன் தொடர்ச்சியான வரலாற்றை அறிய போதிய சான்றுகள் காணப்படுகின்றன.

தாய்லாந்தில் பௌத்த சமயமானது வளர்ச்சியடைய ஆதரவு வழங்கிய மன்னனான ராம் ஹாம்-ஹெங் விளங்குகின்றான். இம்மன்னன் இலங்கையுடன் சமய உறவுகளைப் பேணினானென்பது குறிப்பிடத்தக்கதாகும். கி.பி 1257இல் இலங்கை மன்னன் இரண்டாம் பராக்கிரமபாகு ஆட்சிக்காலத்தில் பௌத்தத் துறவிகள் தாய்லாந்தில் தூய வடிவத்துடன் தங்களைஅறிமுகப்படுத்திக்கொள்வதற்காக இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படுகின்றது. இதன்மூலம் இலங்கையில் உபசம்பதா விழா எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதனை இலங்கையின் பாலி மொழி இலக்கியமான சூளவம்சமும், தாய்லாந்தின் கி.பி 1277ஆம் ஆண்டுக்குரிய கிங்ஸ் பாறைக் கல்வெட்டொன்றும் உறுதிப்படுத்துகின்றன. ராம் ஹாம்-ஹெம் மன்னன் தாய்லாந்து விகாரைச் சமூகத்தினரின் நிர்வாகத்தினைக் கவனிப்பதற்காகப் பாரம்பரியமான ஒரு சங்கப் பிரதானியை நியமித்தான் என்ற தகவலையும் அக்கல்வெட்டு கூறுகின்றது. இதன் போது சிஹிங்க (சிங்கள) புத்தர் உருவம், இரண்டாம் பராக்கிரமபாகுவால் தாய்லாந்துக்கு அனுப்பப்பட்டது.

தாய்லாந்துக்கும் இலங்கைக்குமிடையில் உபசம்பதா நிகழ்வில் பௌத்தப் பண்பாட்டுப் பரிமாற்றங்களைக் காணலாம். லோத்தாய் (1317-1347) மன்னர் காலத்தில்,கீழ் மியான்மாரில் வசித்த உடும்பரா மகா சாமியிடம் உபசம்பதா செய்ய ஒரு துறவியை அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். உடும்பரா மகாசாமியின் சீடர்கள் சியாங்மாய், லாம்புன், சஜ்ஜனாலயா ஆகிய இடங்களில் (வடக்கு தாய்லாந்து) சிங்கள சங்கத்தை நிறுவினர். இலங்கையிலுள்ள ஸ்ரீபாதத்தைப் போல புத்த பாதங்களை அமைத்தன. இவனது சமயப் பற்றின் காரணமாக தர்மராஜன் என்ற பட்டம் கிடைத்தது (கோல் D.G 1971:201). முதலாம் தர்மராஜன் காலத்தில் சுமண என்ற பௌத்தத் துறவி தனது பக்தர்களுடன் இலங்கையிலிருந்து புறப்பட்டுத் தாய்லாந்து சென்று அங்கு பௌத்த சமயம் பரப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது. இத்தகவலை இலங்கையிலுள்ள சிங்களக் கல்வெட்டுகளும் உறுதிப்படுத்துகின்றன. லூதாய் மன்னர் (1347-1368) சிங்களச் சங்கத்தின் பெரும் புரவலராக இருந்து பணியாற்றினார். இலங்கையிலிருந்து சங்க ராஜா, மேதங்கரா பிக்குகளுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன. இவர் காலக் கல்வெட்டுகள் அவர் சமந்தகுடாவிற்கு விஜயம் செய்ததையும், ருவான் வெலிசாய, மகாவிகாரை, மஹியங்கனையுடன் தொடர்பு கொண்டுள்ளதையும் பதிவு செய்துள்ளன.

ராம கம்ஹெங்கின் மருமகனான ஸ்ரீ ஸ்ரத்தா பதினான்காம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்து கம்பளை மற்றும் மஹியங்கனைவில் பத்து ஆண்டுகள்தங்கியிருந்தார். கம்பளையில் இருந்து சிங்களக் கைவினைஞர்களின் குழுவை அழைத்துச் சென்று சுகோத்தை நகரத்தை மறுவடிவமைப்பு செய்வதற்காக அவர்களை ஐந்து கிராமங்களில் குடியமர்த்தினார். இதனால் கட்டடக்கலைத் தொடர்புகளும் ஏற்படுத்தப்பட்டன. சிங்கள வார்ப்புருக்களின் மாதிரியாகக் கொண்டு பெரிய மணி வடிவ ஸ்தூபிகள், நிற்கும் யானைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் சீயம் நாட்டிலிருந்து வருகை தந்த பிக்குகள் பௌத்தத் திருநூல்களை கற்றுக் குருஅபிசேகம் பெற்று அந்நாட்டுக்கு திரும்பியமை பற்றியும் அறியமுடிகின்றது. போர்த்துக்கேயராட்சிக் காலத்தில் இலங்கை பௌத்த சங்கம் வீழ்ச்சியடைந்தது. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னரின் வேண்டுகோளின்படி, தாய்லாந்து மன்னர் போரோம்கோட் 1753இல் தாய்லாந்து துறவிகளை இலங்கைக்கு அனுப்பினார். அது, இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சியின் தொடக்கமாக மாறியது.

## முடிவுரை

இலங்கையின் அமைவிடம் தென்கிழக்காசியாவுடன் ஆரம்ப காலம் முதலாக வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தக் காரணமாகியது. வர்த்தகத் தொடர்புகள் பதினொராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையிலான அரசியற் தொடர்புகளுக்கும் வழிவகுத்தன. முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு, இரண்டாம் பராக்கிரமபாகு ஆட்சிக் காலத்தில் முக்கியச் செல்வாக்குப் பெற்றன. முதலாம் விஜயபாகு காலத்தில் பர்மியருடன் நட்புறவுத் தொடர்புகள் காணப்பட்டபோதிலும் முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் படையெடுப்புக்களுக்கும் காரணமானது. இரண்டாம் பராக்கிரமபாகு காலத்தில் பண்பாட்டுத் தொடர்புகளுக்கு அடித்தளமிட்டது.

வர்த்தக நடவடிக்கைகளால் தூண்டப்பட்ட சமயத் தொடர்புகள் இலங்கையையும் தென்கிழக்காசியாவையும் இன்னும் நெருக்கமாக்கியது. பௌத்தத்தின் மீதான ஆர்வம் பதினொராம் நூற்றாண்டில் இரு பகுதிகளுக்குமிடையில் உறவைத் தூண்டியது. சமகாலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட இந்து மறுமலர்ச்சி, முஸ்லிம் விரிவாக்கத்தின் விளைவாகப் பழைய பௌத்த பண்புகளில் அங்கு மாறுதல்கள் ஏற்பட்டமையால் தேரவாதப் பௌத்தம் நிலவிய இலங்கையுடன் தென்கிழக்காசியா சமகாலத்தில் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. அத்தொடர்புகள் பதினாறாம் நூற்றாண்டு காலப்பகுதிவரை பர்மா, தாய்லாந்து, கம்போடியா, இந்தோனேசியா தீவுகளுடன் நிலைத் திருந்துள்ளது. வரலாற்றில் இரு பகுதிகளுக்குமிடையில் அரசியல், பொருளாதார சமூக பண்பாட்டுத் தொடர்புகள் நிலவியுள்ளன. இவற்றுள் பண்பாட்டுத் தொடர்புகள் தனித்துவமானவை.

## உசாத்துணை


1. கிருஷ்ணராசா. செ., (2012). இலங்கைப் பண்பாட்டு பரிணாமத்தின் அடிப்படைகள் பாகம் ஐ (கி.பி 1500 ஆண்டுகள் வரை), AB Creator & Publisher, கொழும்பு.
2. குணராசா. க., (2008). சூளவம்சம் கூறும் இலங்கை வரலாறு, கமலா பதிப்பகம், கொழும்பு.
3. கோல் D.G, (1971), தென்கிழக்காசிய வரலாறு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை.
4. நடராசா.க.வே., (1973). பண்டைய ஈழம் - இரண்டாம் பாகம், சேது நூலகம்